[1993 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமர்ஷியல் வங்கிகளோடு நம்முடைய கூட்டுறவு வங்கிகளை ஒப்பிட முடியாது. கூட்டுறவு வங்கிகள் மிகச் சிறிய வங்கிகள். பெரிய கமர்ஷியல் வங்கிகள் கொடுத்த கடன் திருப்பி வரவில்லை என்று சொன்னால்கூட, அவை தள்ளுபடி செய்துவிட்டு தாக்குப் பிடிக்க முடியும். ஆனால், கூட்டுறவு வங்கிகள் அப்படிச் செய்தால் நசிந்து போகும். அதனால் விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, கமர்ஷியல் வங்கிகளோடு ஒப்பிட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கிகளும் இந்த முறையைக் கடைப் பிடிக்கலாமே என்ற யோசனையை நிச்சயமாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளிடத்திலே மட்டும் வசூல் செய்கிறார்கள். வசதியான பெரும் தொழில் அதிபர்களிடத்திலே வசூல் செய்யப்படுவது இல்லை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்கள் என்று நான் நினைக்கின்றேன். ஆனால், வசூல் செய்வதில் கடுமை இல்லாமல் ''ஹாரஸ்மென்ட்'' இல்லாமல் பார்த்துக்கொள்வோம் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 294. திரு. இரா. அப்பு நடேசன் இருக்கையில் இல்லை. திரு. கு. லாரன்ஸ், கேட்கிறார். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

294—

கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவு பங்கீட்டு அட்டை வழங்கல்.

*11389— திரு. இரா. அப்பு நடேசன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவு பங்கீட்டு அட்டை இல்லாதவர்களுக்கு உணவு பங்கீட்டு அட்டை வழங்கப்படாதிருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக உணவு பங்கீட்டு அட்டை வழங்க அரசு உத்தரவிடுமா ?

1993 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டத்தில் குடும்ப அட்டைகள் இல்லை என்று இதுவரையில் வந்து இருக்கின்ற விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகள் ஆரம்பிக்கப்பட்ட காலக் கட்டத்திலிருந்து இன்றுவரை பார்த்தால் அந்தப் பகுதிகளிலே அப்படியே அந்தக் கடைகள் இருக்கின்றன. ஆனால், மக்களுடைய தேவைகளுக்கு ஏற்ப, மக்களே அந்த இடவசதி போன்றவைகளை செய்து கொடுத்தால், அந்தப் பகுதிகளிலே அதிகமான பகுதிநேர கடைகள் ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதோடு, கன்னியாகுமரி மாவட்டத்தில், பெல்ட் ஏரியா இல்லாத என்னுடைய தொகுதி போன்ற பகுதிகளில் எல்லாம் 10, 15 ஆண்டுகளாகவே மளிகை வியாபாரங்களை செய்து வருகிறார்கள்; அங்கே அவர்கள் அரிசி வியாபாரம் செய்வதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது; எனவே, புதிதாக தேவைக்கு ஏற்ப சொற்ப அளவிலேயாவது அரிசியை அந்தக் கடைகளிலே வைத்து வியாபாரம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேள்வி, குடும்பு அட்டைகளைப் பற்றியது. அவைகளை அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 3 இலட்சத்து 40 ஆயிரம் கார்டுகளை கொடுத்து முடித்துவிட்டோம். மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பரிந்துரை செய்த கார்டுகளும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. தற்போது, 28—2—1993 வரை 97 ஆயிரம் மனுக்கள் வந்து இருக்கின்றன. அவைகளை இப்போது பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறோம். இந்த மாதத்திலிருந்து புதிய கார்டுகள் கொடுக்கப்பட்டுவிடும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அந்தப் பகுதிகளிலே பிரச்சினை இருக்குமேயானால், தேவைக்கு ஏற்ப அவர்களுக்கு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.